30

பிரசுரம் நே. 1

# சன்மார்க்க போதகர்

## நபிகள் நாயகத்தின் திவ்விய சரிதம்

---

K. A. அப்துல் ஹமீத் சாஹிப்
எழுதியது.

---

திருச்சினப்பள்ளி
"ஹமீதியா" புத்தகசாலையாரால் வெளியிடப்பெற்றது.

---

கிடைக்குமிடம் :-
பத்திராதிபர் "இந்திய ஒளி" ஆபீஸ்
திருச்சினப்பள்ளி.

---

1932. [விலை அணு 2.

ஔ7:31
N32
142884

"இந்திய ஒளி" புத்தகசாலை விளம்பரம்.

# இனிய நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| இந்திரஜித்தன் | 0 | 12 | 0 |
| இரத்தனவளி | 0 | 12 | 0 |
| இராஜபுத்ரவீரன் | 0 | 12 | 0 |
| இரத்னாங்கி | 0 | 12 | 0 |
| இந்திரா | 0 | 3 | 0 |
| இரட்டை சகோதரர் | 0 | 8 | 0 |
| இரமணீயம் | 0 | 4 | 0 |
| இன்பவல்லி | 0 | 4 | 0 |
| இரட்டை பிள்ளைகள் | 0 | 3 | 0 |
| இரண்மயி | 0 | 2 | 0 |
| இட்டார்க்கு இட்டபயன் | 0 | 1 | 6 |
| இனிது முடிவதே இனியது | 0 | 2 | 0 |
| இரண்டு நாய்களின் கதை | 0 | 2 | 0 |
| இரஞ்சித்ஸிங் | 0 | 10 | 0 |
| இளமையும் ஒழுக்கமும் | 0 | 10 | 0 |
| இந்திய ஸ்திரி ரத்னங்கள் | 0 | 8 | 0 |
| இராஜேந்திரன் | 1 | 0 | 0 |
| இயற்கைமதம் | 0 | 8 | 0 |
| இமாம் கஸ்ஸாலி | 1 | 4 | 0 |
| இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |

"இந்தியஒளி" புத்தகசாலை,
திருச்சினப்பள்ளி.

"இந்தியஒளி" விளம்பரம் பின்பக்கத்தில் பார்க்க

# முகவுரை.

இவ்வுலகத்தில் சன்மார்க்கத்தின் மேலான தத்துவங்களைப் பரவச்செய்த போதகரின் போதனைகளில் சகோதரத்வம், சமத்வம், சமாதானம், சீர்திருத்தம், சத்தியம், சாந்தம், கருணை, அருள், பக்தி, தவம், தியாகம், அற்புதம், கலை, ஞானம், பராக்கிரமம், முயற்சி, உபதேசம், இனியமொழி, ராஜியம், தேசியம், ஆத்மத் தூய்மை முதலிய நற்குணங்கள் யாவும் நிறைந்து விளங்குகின்றன. இவற்றை சில சிறு நூற்களாகப் பிரசுரம் செய்யலாமென்னும் அவாவினால், இச்சிறு புஸ்தகத்தை அவற்றுள் முதலாவதாக வெளியிட்டுள்ளேன்.

## முகவுரை.

சன்மார்க்க போதகர் அவர்களது மாட்சிமை தங்கிய வாழ்க்கை இவ்வுலக மக்கள் பின்பற்றி நடக்குமாறு ஆண்டவனால் அருளப்பெற்றதோர் அரிய படிப்பினையாகும். எனவே, அளவிலா நன்மையைப் பயக்கக் கூடிய இந்நூல் உலக மக்களுக்கு இன்றியமையாததென்பதை குறிப்பிடுகின்றேன்.

K. A. அப்துல் ஹமீத் சாஹிப்.

---

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.)

போய்யான பூவுலக வாழ்வுபெரி தென்றெண்ணிப்
புத்தித்தடு மாறமலும்
மெய்யான சுவனலோ கந்தன்னை யெப்போதும்
மேவுமன மாறமலும்
கையாரத் தான்மது செய்திடும் பெரிதான
கருணையது மாறமலும்
ஐயானே அப்துல் ஹமீதுக்கு வரமருள்
அல்லாவே அருளாளனே.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# சன்மார்க்க போதகர்

## அரேபியாவின் நிலைமை.

இஸ்லாம் உதயமாவதற்கு முன்பு அரப் தேசம் அவிவேகமும், அந்தகாரமும் சூழ்ந்து கொண்டிருந்தது. மக்கமா நகரம் மற்ற நகரங்களைக்காட்டினும் மிகக் கேவலமாயிருந்தது. சுமார் 1350 வருஷங்களுக்கு முன்னே உலக மக்களெல்லாம் விக்கிரக ஆராதனைக் காரர்களாகவே யிருந்தார்கள். ஆனதால், ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாருக்கு சீர்திருத்தங்களையும், நல்லொழுக்கங்களையும், எடுத்துக்

காட்ட திறமையற்றவர்களாயும், நன்மை இன்னது, தீமை இன்னது என்று பகுத்தறியும், சக்தியற்றவர்களாயும், மூடர்களாயும், கொலை, களவு, குடி, சூதாட்டம், நரபலி முதலிய துர்க் காரியங்களை செய்யக்கூடிய துஷ்டர்களாகவே விளங்கிவந்தார்கள்.

இப்படிப்பட்ட கூட்டத்தாரிடையே இறைவனருளால் உலகத்தை சீர்படுத்தி, அகில மக்கள் யாவரையும் நேர் வழியிலாக்க ஒரு ஒப்பற்ற தீர்க்கதரிசி திரு மக்கமா நகரிலேயே உதயமாகுதல் அவசியமேன்று எல்லாம் வல்ல இறைவனின் நாட்டமிருந்து வந்ததுபோலும்!

## ஜனனம்.

திரு மக்கமா நகரில் குரைஷ் குலத்தில் "அப்துல் முனப்" குமாரர் "ஹாஷிம்" என்பவரின் சந்ததியில் "அப்துல் முத்தலிபின்" புத்திரர்களில் "அப்துல்லாவும்" ஒருவர். இவரின் மனைவியாருடைய பெயர் "ஆமினு" என்பதாகும். ஆமினு மூன்று நான்குமாதம் கர்ப்பமாயிருக்கும்போது "அப்துல்லா" வர்த்தகத்தின்பொருட்டு மதீ

னமா நகருக்குச் சென்று, திரும்பிவரும் வழியில் காலஞ் சென்றார். பிறகு துக்கக்கடலில் மூழ்கியிருந்த "ஆமினா" அவர்கள் பெற்ற குழந்தை யாவராயிருக்கக்கூடும்? அவர் தான் இவ்வுலகத்திற்கான சன்மார்க்க போதகர். அவர் கிறிஸ்து பிறந்த 570-ம் வருஷம் ஆகஸ்ட்டுமாதம் 29-ந்தேதி றபீஉல் அவ்வல்மாதம் 12ந்தேதி திங்கட்கிழமை வைகறை பொழுது திரு மக்கமா நகரின்கண் ஜனனமானார். இவரின் ஜனனத்திற்கு முன்பே இவரது தந்தையார் "அப்துல்லா" அவர்கள் காலஞ்சென்றார் என முன்னமே யுரைத்துள்ளோம். இவரின் பாட்டனார் "அப்துல் முத்தலிப்" தமது பேரரான இப்பாலகரை "முஹம்மத்" தென்றும் இவரின் அன்னையார் "அஹமத்" என்றும் நாமமிட்டார்கள்.

## இளமைப்பருவம்.

அக்காலத்தில் அரேபியர்கள் தமது குழந்தைகளை செவிலித் தாய்மார்களிடம் ஒப்படைத்து வளர்க்கச் செய்யும் வழக்கத்தின் பிரகாரமே, இப்பாலகரும் "ஹலீமா" என்னும் செவிலித்தாயினிடம்ஒப்படைக்கப்பட்டு வளர்ந்து வந்தார். நான்கு பிராயமடைந்த பின்னர் அன்னை ஆமினா அவர்களிடமே ஒப்புவிக்கப்பட்டார். ஆறுவது பிராயத்தில்

அன்னையவர்களுடன் மதீனமா நகருக்குச் சென்று திரும்பி வரும் வழியில் அன்னையவர்கள் காலஞ்சென்றார். பின்னர், பாட்டனார் "அப்துல் முத்தலிப்" வளர்த்துவந்தார். எட்டாவது பிராயத்தில் பாட்டனாரும் காலஞ்சென்றார். குழந்தைகளுக்கு அளவிடா பாக்கியமாகிய மாதா பிதாவின் பாதுகாப்புக்கு வேறு யாருடைய பாதுகாப்பும் நிகராகாது. எனினும், சன்மார்க்கராக அவதரித்த நபிபெருமானார் (ஸல்) அவர்கள் அனாதையாகவே வளரவேண்டுமென்று நாயனின் நாட்டமிருந்ததுபோலும்! பிறகு சிறிய தகப்பனாரான "அபூதாலிப்" அவர்களின் ஆதரவுக்குள்ளிருந்து வந்தார். பத்துப் பன்னிரண்டு பிராயம்வரை தன் சிறிய தந்தையாருக்கும், தமக்கும் சொந்தமான ஆடுகளை மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு, கல்விப், பயிற்சியடையாமலும், தன் சிறிய தகப்பனாரின் கால்நடைகளை பாதுகாத்துக்கொண்டும் காலங்கழித்து வந்தாரெனினும், தற்சிந்தையாய் தெய்வபக்தியும், சாந்தகுணமும், ஏற்பட்டு அரேபியர்களின் ஒழுங்கீனமான செய்கைகளையும், பெண் சிசுவதை, கொலை, களவு, குடி, சூதாட்டம், நரபலி, விக்கிரக ஆராதனை, மூடபக்தி முதலியவற்றை கண்ணுற்று கடிய கவலைக்குள்ளாவார்கள். இவ்வாறாக இளமைப் பரு

வத்திலிருந்து, யௌவன பருவத்திற்கு வந்தார். அவருடைய நற்குணம், நன்னடத்தை முதலியவைகளைக்கண்ட ஜனங்கள் அவரை (அல்—அமீன்) நம்பிக்கையாளர் எனப் பெயரிடலானார்கள்.

## விவாகம்.

இருபத்து ஐந்தாவது வயதில் நாற்பது வயதுள்ள விதவையான திரண்ட ஐசுவரியமுள்ள "கதீஜா" என்னும் மாது சிரோண்மணியின் காரியஸ்தராய் ஷாம், எமன், புஸ்ரா ஆகிய தேசங்களுக்குச் சென்று வியாபாரத்தை விவேகமாய் நடத்திவந்தார். அவர் செய்த ஒவ்வொரு காரியத்திலும் சத்தியம், நியாயம், கண்ணியம், நம்பிக்கை முதலியவற்றை பூஷணமாகக்கொண்டு நற்பெயர் பெற்றார். இவைகளையெல்லாம் கண்ணுற்ற "கதீஜா" அவரை மணந்துகொள்வதாய் விண்ணப்பித்துக்கொண்டார். நபிபெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன் இரண்டுமுறை வாழ்க்கைப்பட்டு ஒரு சில குழந்தைகளுக்குத் தாயும் அரைநூறு வயதுடைய மூதாட்டியுமான 'கதீஜா' நாயகியை மணந்துகொள்ள ஒப்புக்கொண்டதும் அங்கர் வாசிகட்குப் புதுமையாகவேயிருந்தது. அக்காலத்தில் அரேபியர்கள் பெண்களை கேவலமாக எண்

ணிப் பெண்குழந்தைகளை உயிருடன் புதைத்து விடுவார்கள். விதவைகளை மிருகங்களினுந் தாழ்வாய் நடத்திவந்தார்கள். அக்காலத்தில் இந்தியாவிலும் பெண்களை உடன்கட்டை யேற்றிவிடும் வழக்கமிருந்தது. விதவைப் பெண்களின் முன்னேற்றத்திற்காகவே சன்மார்க்க தூதரான நபிபெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வாறு மணந்து கொண்டார்.

இவ்விவாகம் நடந்து பதினைந்து வருஷங்களுக்குப்பின் நபிபெருமானார் (ஸல்) "நுபுவ்வத்" என்னும் நபித்துவம் பெற்றார். முதன்முதலாக நபித்துவத்தின்மீது ஈமான் கொண்டு வாழ்க்கை துணைவியாக இருந்துவந்த நாகியவர்களைப்பார்க்கிலும் நாயகமவர்களின் அந்தரங்க உண்மையைத் தெரிந்துகொள்ள எவரால் முடியும்?

## ஹஜருல் அஸ்வத் சம்பவம்.

முப்பத்தைந்தாவது வயதில் குறைஷிகள் கஃபதுல்லா ஷரீபை புதுப்பித்துக்கட்ட ஆரம்பித்தார்கள். அக்காலை "ஹஜருல் அஸ்வத்" என்னும் கருங்கல்லை குறிப்பிட்ட ஓர் ஸ்தானத்தில் வைக்கவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டது. குறைஷிகளின் ஒவ்வொரு தலைவருக்கும் தாமே

தம் கரத்தால் அக்கல்லை வைக்கவேண்டுமென்ற அவா இருந்தது. எனவே, ஒற்றுமை குறைவேற்பட்டு ஜனங் களுள் ரத்தப்பிரளய யுத்தம் கிளம்பக்கூடியதாயிருந்தது கடைசியாக ஒரு முடிவுக்கு வந்ததில் நபிபெருமானார்(ஸல்) அவர்களை அப்பொருப்புவாய்ந்தவராக ஏற்பட்டார்கள். எனவே, எல்லா பிரமுகர்களும் நீதிபதிப்பதவிக்குரிய கிரீ டத்தை "நபிபெருமானார்" (ஸல்) அவர்கள் சிரசின்மீதுசூட்டி னார்கள். அவர் தன் பரிபூரணமான ஜீவியகாலம் முழுதும் யாதொரு பிரயோஜனமான காரியத்திலேயே செலவழித்து வந்தார். நாற்பதாவது வயதில் மக்கமா நகரின் சமீபத்தில் புல், பூண்டு, ஜலமில்லாத ஹிரா என்னும் மலைக்குகையில் தனித்திருந்துகொண்டு பரம்பொருளான கடவுளை பல நாள் இரவும்பகலும் சிந்தனைசெய்துகொண்டிருப்பார். ஓரோர்சமயம் தன் இல்லத்திற்கும் வருவார். "கதீஜா" நாயகியும் மேற்சொன்ன குகைக்கு போய்வருவதுமுண்டு.

## தெய்வ அறிவிப்பு.

நாற்பதாவது வயது பூர்த்தியானபின் சன்மார்க்க போதகரான "நபிபெருமானார்" (ஸல்) அவர்கள் ஒருநாள் குகையில் தனித்திருக்கும்போது ஜிப்ரயீல் என்னும் வான வர் வந்து "நபிபெருமானார்" (ஸல்) அவர்களைக் கட்டித்

தழுவி ஆலிங்கனஞ் செய்து நீங்கள் ஆண்டவனின் திருத்தூதராயிருக்கின்றீர்கள் என்று சுப சோபனங் கூறினர். இவ்வாச்சரியமான சம்பவத்தை "கதீஜா" நாயகியவர்களிடம் சொன்னர். அவ்வம்மையார் "வரகா" என்னும் வயோதிகரிடம் போய்ச் சொல்லவே "பரிசுத்தம் பரிசுத்தம்" இவர்தான் எதிர்பார்த்திருந்த தீர்க்கதரிசி என விடைபகர்ந்தார். அதன் பின்பு "நபிபெருமானர்" (ஸல்) விக்கிரக வணக்கங்களை விட்டு ஏகதெய்வக் கடவுளை வணங்கும்படி போதிக்கலானர்.

## போதனை.

அவரின் போதனையை முதன்முதலாக ஒப்புக்கொண்டவர். "கதீஜா" நாயகி யாவர். இரண்டாவதாக "அலி" (ரலி) அவர்கள் மூன்ருவது "ஜெய்த்" என்னும் அடிமை' பிறகு முறையே "அபூபக்கர்" (ரலி) "உதுமான்" (ரலி) இன்னுமற்ற நான்கு பிரமுகர்களும் ஆக மூன்று வருஷங்களில் முப்பதுபேர் ஈமான்கொண்டு இஸ்லாத்தை ஒப்புக்கொண்டார்கள். பிறகு பகிரங்கப் பிரசாரம் புரிய ஆணை பிறந்தது. அவ்வாறே "நபிபெருமானர்" (ஸல்) அவர்கள் ஆண்டவனின் ஏக தத்துவத்தைப்பற்றி பகிரங்கமாய் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்கள். இது குப்பார்களுக்குச்

சமாதானப்படவில்லை. எனவே, அவரை எதிர்க்கலானார்கள். "நபிபெருமானார்" (ஸல்) அவர்களின் சன்மார்க்க போதனை குப்பார்களுக்கு புதிதாகவே தோன்றிற்று. ஆதலால், புது மதத்தார் கஃபாவின் சமீபத்தில் தொழுகக் (வணங்க)கூடாது என்பதாகக் கட்டுப்பாடு செய்துவிட்டார்கள். எனவே, "நபிபெருமானார்" (ஸல்) அவர்களும், அவர்களின் சிஷ்யர்களும் தனிப்பட்ட இடங்களில் தொழுக (வணங்க)லானார்கள். எனினும், விரோதிகள் அவர்களை விட்டபாடில்லை. தொழுகக்கூடிய இடங்களில் "அபூலஹபு"வின் மனைவி உம்மி "ஜமீலா" இன்னுமற்றவர்களும் சேர்ந்து கற்களும், முட்களும், மண்ணும், குப்பையும் முதலிய ஆபாசங்களைப் போட்டு தொந்தரவுக்குள்ளாக்கினார்கள். பல நிந்தனைகளும் செய்யலானார்கள்.

---


## தொழுகை விளக்கம்.

தமிழில் தர்ஜுமா செய்யப்பட்டிருக்கின்றது. அரபு தெரியாத தமிழ்நாட்டு முஸ்லிம்களுக்கு இப்புத்தகம் மிகுந்த பிரயோசனமுள்ளதாக இருக்குமென யாமெடுத்து கூற வேண்டுவதில்லை. புத்தகம் 10-க்கு ரூ. 1—0—0. தனிப்பிரதி வேண்டுவோர் 2 அணா தபால் ஸ்டாம்புகளை அனுப்பவும்.

**K. A.** அப்துல் ஹமீத் சாஹிப்,

பப்ளிஷர் அண் புக்செல்லர், திருச்சினாப்பள்ளி.

## உபத்திரவம்.

இவைகளையெல்லாம் கேள்வியுற்ற மதீனமா நகரின் தலைவரொருவர் சன்மார்க்க போதகரான "நபிபெருமானார்" (ஸல்) அவர்களை இம்சிக்கவேண்டாம், அவர் போதிக்கும் புதிய மார்க்கத்தைக் கேட்டு ஆராய்ச்சி செய்வது நலமென் பதாக மக்கா நகர் வாசிகளுக்கு ஒரு நிருபம் வரையலானார். அதை, குப்பார்கள் உணர்ந்தார்களில்லை. உமையா என் பவன் "பிலால்" (ரலி) அவர்களை உச்சிவெய்யிலில் கற் பாறையின்மேல் முதுகு படும்படியாக படுக்கவைத்து மார் பின்மேல் பாரமான கல்லை வைத்து இம்சைக்குள்ளாக்கி னான். இவ்விம்சைகளையெல்லாம் "பிலால்" (ரலி) அவர் கள் பொருட்படுத்தாமல் "அஹதுன்" "அஹதுன்" (ஏக நாயகன், ஏகநாயகன்) என்பதாகச் சொன்னார்கள். என்னே குப்பார்களின் உபத்திரவம்! இப்படிப்பட்ட முஸ்லிம்களை யெல்லாம் கொடுந் துன்பங்களுக்காளாக்கினார்கள். "நபி பெருமானார்" (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதற்காக முன் வந்த "ஹாரிஸ் பின் அபீஹாலா" அவர்களை விரோதிகள் வாளைக்கொண்டு தாக்கவே வெட்டுண்டு ஷஹீதாகிப்போனார் கள். முஸ்லிம்களை இவ்வாறெல்லாம் சித்திரவதை செய்ய என்னே இவர்களின் மனத்துணிபு!

இதே கிளர்ச்சிகள் பல பக்கங்களிலும் கிளம்பியவை நபிபெருமானார் (ஸல்) அவர்கள் சிறிதும் அஞ்சினார்களில்லை. தமது நிறந்தரமான இஸ்லாத்தைப்பற்றிய பிரச்சினைகளை பல பொதுச்சபைகளிலும், கூட்டங்களிலும், தெருக்களிலும் சென்று செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இப்போதனை களின்மீது வெறுப்பு கொண்ட குப்பார்கள் எதிர்பிரசாரங் கள் புரிந்தும் யாதொரு பயன்படவில்லை. பின்பு,

## ஆசையூட்டுதல்.

"நபிபெருமானார்" (ஸல்) அவர்களிடம் குப்பார்கள் ஒன்றுசேர்ந்து வந்து இஸ்லாத்தைப்பற்றிய போதனைகளை யும், எங்கள் விக்கிரகங்களை இழிவுபடுத்துவதையும் விட்டு விட்டால் தமது பெருமை, புகழ் செல்வம் முதலியவை களைக் கொடுத்து அரசனாக்கிவிடுவதாக வேண்டிக்கொண் டார்கள். அதை அவர் மறுதளித்துவிட்டு புகழ் அடங் கலும் ஆண்டவனுக்கே! நான் ஒரு சாதாரண மனிதனே, ஆனல், தூதராக அனுப்பப்பட்டுள்ளேன். ஆனதால் தங் களின் விருப்பத்திற்கிணங்கி என் வேலையை விட்டுவிட முடியாது. தம் மார்க்கம் மனதிற்கு ஒத்திருக்கின்றதா வென பகுத்தறிவை விசாலப்படுத்தி கவனியுங்களென விடைபகரலானார்கள்.

பிறகு "அபூதாலிப்" அவர்களிடம் ஒன்றுகூடிவந்து முஹம்மத் அவர்கள் எங்கள் தெய்வங்களை யெல்லாம் இழிவுபடுத்தி பிரசங்கம் செய்துவருகின்றார். நாங்கள் பல தடவைகளில் சொல்லியும் அவர் கவனித்தாரில்லை இனியும் நாங்கள் சகிக்கமாட்டோம். தாங்கள் தயவுசெய்து அவரிடம் சொல்லி தடுக்கவேண்டும், இல்லாவிடில் யுத்தக் கிளர்ச்சிகள் ஆரம்பிப்போம் என்பதாக முறையிட்டுக் கொண்டார்கள். அதன்படியே "அபூதாலிப்" அவர்களும் "நபிபெருமானர்" (ஸல்) அவர்களிடம் சொல்லியும் பயன் படவில்லை. ஆதலால், கிளர்ச்சிகள் அதிகமாகவே ஏற்பட்டு விடவே "அபூதாலிப்" ஹாஷிம் "முத்தலிப்" முதலிய கிளையார்களும் "நபிபெருமானர்" (ஸல்) அவர்களுக்கு உதவியாகவேயிருந்துவந்தார்கள். ஆதலால் இவர்களை விவாகவர்த்தக முறைகளிலிருந்து விலக்கிவைத்துவிட்டார்கள். எனவே, முஸ்லிம்களும்,முஸ்லிமல்லாதவர்களும் மக்காவை விட்டு "ஹிப்" என்னும் மலைக்கணவாய்க்குள் குடும்ப சகிதமாகப் போய் வசிக்கலானார்கள். அன்னபனாதிகளுக்கும் மிகுந்த அவஸ்தைப்பட்டார்கள். மூன்றுவருஷங்களுக்குப்பின்னால் "ஹிஷாம்" "ஜுபைர்" இன்னுமற்றவர்களின் உதவியால் மக்காவுக்குத்திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

மூன்று வருஷங்களாகியும் மக்காவில் கிளர்ச்சிகள் குறைந்தபாடில்லை. "நபிபெருமானார்" (ஸல்) அவர்களின் போதனையை குப்பார்கள் ஏற்றுக்கொள்வதாகவுமில்லை. ஆகவே, "தாயிப்" தேசத்திற்குப் போய் போதிக்கலானார். அத்தேசத்தார்களும் "நபிபெருமானார்" (ஸல்) அவர்களை பித்தர் என்பதாக கல்லால் அடித்து வெறட்டலானார்கள் அடிபட்டு காயங்களுடன் மக்காவுக்கே திரும்பி வந்தார்கள்.

## மக்காவை விட்டு மதீனாவுக்குச் செல்லல்.

குப்பார்களின் கொடிய பகைமையும், குரோதமும் ஏற்படவே "நபிபெருமானார்" (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை ஒவ்வொரு குடும்பமாக நூறு குடும்பத்தார்களை மக்காவை விட்டு மதீனாவுக்கு தாட்டி விட்டு தாமும், அலியும், (ரலி) அபூபக்கரும்,(ரலி) மக்காவிலேயேயிருந்தார்கள். இவ்வாறே வீடுகளெல்லாம் காலி ஆகிக்கொண்டே போனால் மக்கா நகருக்கே என்ன ஆபத்து சம்பவிக்குமோ வென பயந்து "நபிபெருமானார்" (ஸல்) அவர்களைக்கொன்றுவிட வேண்டுமென தீர்மானம் செய்யலானார்கள். ஒருவன் கொன்றால் அக்கொலைக்கு அவன் ஆளாவானென்பதையும்அஞ்சி குடும்பத்திற்கு ஒரு தைரியசாலியாக தேர்ந்தெடுத்து "நபிபெருமானார்" (ஸல்) அவர்கள் அதிகாலையில் வீட்டை விட்டுப்

புறப்படும் போது அவரை ஆளுக்கொருகத்தியால் குத்திக் கொன்று விட வேண்டுமென முடிவு செய்துகொண்டு நடு இரவிலேயே வீட்டைச்சுற்றிலும் சூழ்ந்துகொண்டார்கள். "நபிபெருமானார்" (ஸல்) அவர்கள் தன் படுக்கையில் "அலி" (ரலி) அவர்களை படுக்கவைத்துவிட்டு தன் போர்வையும் அவர்மேல் போர்த்திவிட்டு ஜன்னலின் வழியாக "அபூபக்கர்" (ரலி) அவர்களின் வீட்டுக்குப்போய் அவருடன் மக்காவைவிட்டு புறப்படலானார்கள். விரோதிகள் தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. ஆகவே, அவர் சிரசைக் கொண்டுவருபவனுக்கு தக்க வெகுமதி கொடுப்பதாக வாக்களிக்கலானார்கள். பலபேர் வெகுமதி பெருவதற்காக பல பக்கங்களிலும் சென்று தேடலானார்கள். "நபிபெருமானார்" (ஸல்) அவர்களும் "அபூபக்கர்" (ரலி) அவர்களும் இரவெல்லாம் குறுக்குப் பாதையாக நடந்து பகலெல்லாம் ஒளிந்திருந்து காடு, மலை, வனாந்தரங்களைக் கடந்து இடையில் பல விபத்துகளினின்றும் தப்பி (கிறிஸ்து 622-ம் வருஷம் ஜூலை 2உ) றபீஉல் அவ்வல் 16உ வெள்ளிக்கிழமை வைகரைபொழுது மதீனா நகர் போய்ச்சேர்ந்தார்கள். அதிலிருந்தே ஹிஜ்ரி வருஷம் கணக்கிடப்படுகின்றது.

## தற்காப்பு யுத்தங்கள்.

முஸ்லிம்கள் மக்காவைவிட்டு மதீனாவுக்குச் சென்று விட்டபின்பும் விரோதிகள் தங்களின் பகைமையை விட்டார்களில்லை. உத்பா என்பவன் 1000 போர் வீரர்களுடன் மதீனாவிற்கு வந்து முஸ்லிம்களின் தோட்டங்களிலுள்ள பழவர்க்கங்களை கொள்ளையடித்தும், மரங்களை வெட்டி நாசப்படுத்தியும், முஸ்லிம்களை தாக்கவும் ஆரம்பிக்கவே, சன்மார்க்க போதகரான நபிபெருமானார் (ஸல்) அவர்கள் இனி இஸ்லாத்தை நிலைநிறுத்த வேறு வழியில்லை என்பதாக உணர்ந்து, தமது 313 தோழர்களுடன் பத்ரு என்னும் கிணற்றருகில் ஹிஜ்ரி 2வது வருஷம் தற்காப்பு யுத்தம் புரிந்தார்கள். அதில் எதிரிகளில் 70 பேர் மாண்டனர். முஸ்லிம்களில் 14 பேர் ஷஹீதாகிப் போனார்கள்; இன்னும் எதிரிகளில் 70 பேர் சிறைப்பட்டனர்.

இதன் பின்னராகிலும் குப்பார்கள் தங்களின் பகைமையும், குரோதமும் விட்டார்களா? மீண்டும் அபூ ஸுப்யான் என்பவன் 5000 போர்வீரர்களைத் திரட்டிக் கொண்டு போர்தொடுக்கலானான். நபி பெருமானார்(ஸல்)

அவர்கள் 700 முஸ்லிம்களுடன் உஹத் என்னும் மலை அடிவாரத்தில் ஹிஜ்ரி 3 வது வருஷம் போர்புரிந்தார்கள். மலைமேலிருத்தப்பட்ட விரோதிகள் கீழேயிறங்கி வந்து நாலா பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டார்கள்; அதில் ஹம்ஸா (ரலி) ஷஹீதாகிப் போனார்கள். சன்மார்க்க போதகர் (ஸல்) உமர் (ரலி) அபூபக்கர் (ரலி) அலி (ரலி) முதலியவர்களுக்கு காயமேற்பட்டன. சன்மார்க்க போதகர் (ஸல்) கொல்லப்பட்டாரென்பதாக யாரோ ஒருவன் சொன்னதைக் கேட்டு, முஸ்லிம்கள் ஓட ஆரம்பிக்கவே; ஷஹீதாகிக் கிடந்த ஹம்ஸா (ரலி) வின் இருதயத்தை அபூஸுப்யான் மனைவி ஹிந்தா என்பவளும், இன்னு மற்ற சில ஸ்திரீகளும் சேர்ந்து அறுத்தெடுத்தார்கள். இவ்வாறே முஸ்லிம் பிரேதங்களின் காது, மூக்கு முதலிய அவயவங்களை அறுத்து தமது கைகளிலும் கழுத்திலும் ஆபரணமாக அணிந்துகொண்டாடினார்கள். பரிசேதம்! பரிசேதம்!! என்னே குப்பார்களின் வஞ்சக நெஞ்சம்.

இக் கொடுந்துன்பங்களுக்கெல்லாம் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் விரோதிகளை சன்மார்க்க வழியில் திருப்புவாயாக என்று இறைவனிடம் பிராத்தித்தார்

கள். ஆ! இதுவல்லவோ சன்மார்க்க போதகரின் சகிப்புத்தன்மை! பின்பு மதினாவிலிருந்து சில முஸ்லிம் கள் வந்து விரோதிகளை வெரட்டியடிக்கவே ஓட்டம் பிடித்தார்கள்.

இதற்குப் பின்பேனும் தங்களின் பகைமையை விட்டார்களல்லர். ஹிஜ்ரி 5வது வருஷம் அரேபியர்க ளெல்லாம் ஒன்றுசேர்ந்துகொண்டு மதீனாவின் சொர்ப்ப தொகையிரான முஸ்லிம்களையெல்லாம் தாக்கி போர்புரிந்தார்கள். இக் கொடும் போர் மூன்று வாரங் கள் வரை நடக்கவே உணவுப் பொருட்களின் கஷ்டத் தால் எதிரிகள் தாங்களாகவே ஓட ஆரம்பித்தார்கள். இவ்வாறே பன்முறை படையெடுத்தும் எதிரிகளுக்கு பயன்படவில்லை. எனவே கஃபதுல்லாவை தெரிசிப் பதற்காக நபிபெருமானார் (ஸல்) அவர்கள் 1400 முஸ் லிம்களுடன் மக்காநகருக்கு ஹிஜ்ரி 6 வது வருஷம் யாத்திரை செய்தபோதும் எதிரிகள் இடையூறுகள் செய்ய எத்தனித்தார்கள். முடிவாக ஹுதைபிய்யா என்னுமிடத்தில் ஓர்உடன்படிக்கை ஏற்பட்டது. அதில் முஸ்லிம்கள் அடுத்த வருஷம் கஃபாவை தெரிசித்துக் கொள்வதென்றும், அதுமுதல் 10 வருஷங்கள் வரை

இருசாராரும் போர்தொடுக்கக்கூடாதென்றும் முடிவு செய்துகொள்ளப்பட்டது.

இம்முடிவேற்பட்டு இரண்டாவது வருஷத்திற்குள் பனீபகர் என்னும் குப்பார்கள் முஸ்லிம்களைச் சார்ந்த பனுகுஜர் ஆட்களை கொலை கொடுந் துன்பங்களுக்குள்ளாக்கியது மல்லாமல், சபாவில் குடியிருந்த முஸ்லீம்களையும் தாக்கி உயிர்வதை செய்தார்கள். எனவே பனுகுஜர் ஆட்கள் ஒன்றுகூடி நபிபெருமானார் (ஸல்) அவர்களிடம் போய் முறையிடலானார்கள். ஆதலால் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் 10000 முஸ்லிம்களுடன் ஹிஜ்ரி 8வது வருஷம் மக்காவை நோக்கி படை எடுத்தார். அபூஸுப்யான் என்னும் விரோதி தன்வாளை பணியவைத்து உடன்படிக்கைக்கு மீறியதற்கு மன்னிப்புக்கேட்டு, சன்மார்க்க போதனைகளை ஒப்புக்கொண்டு முஸ்லிமானார். கொடும் பாவிகளான சில பேர்களைத் தவிர மற்றவர்கள் மன்னிக்கப்பட்டனர். சன்மார்க்க போதகரான நபிபெருமானார் (ஸல்) அவர்கள் தமது இளம்பிராயத்தில் திருமக்காவை எவ்வாறு சீர்படுத்த வேண்டுமென்று நாடினார்களோ, அதன் பிரகாரமே ஜனங்களுள் அமைதி ஏற்பட்டு, விக்ரக ஆராதனை மூட

டக்தி, கொலை களவு, சூதாட்டம், நரபலி, முதலிய துற்காரியங்களெல்லாம் ஒழிந்துவிட்டதைக் கண்டு மகிழ்ந்தார்கள். பின்பு மதினாவுக்கு வந்து பல சுற்று நாடுகளிலும், தாயிப் முதலிய தேசங்களிலும், சன்மார்க்கப் போதனைகளை சிஷர்கள் மூலமாகவும் பரத்தலானார்கள். தாயிப் தேசத்தின் தலைவர் சன்மார்க்கத்தை தழுவவே, விரோதிகள் அவரை கற்களாலடித்துக் கொன்றார்கள். இவ்வாறெல்லாம் முஸ்லிம்கள் தமது உயிர்களை குப்பார்களுக்கிறையாகக்கொடுத்து சுத்த சத்திய சன்மார்க்கத்தை நிலைநாட்டினார்கள். இவ்வுண்மை அறியாத சில குருட்டு நம்பிக்கையாளர் இஸ்லாம் மார்க்கமானது வாள் பலத்தினால் பரவிற்றெனக் கருதுகிறார்கள். அவர்களின் ஆதாரமற்ற கூற்றுக்கு மறுமொழியாக தனிப் புத்தகம் எழுதலாம், ஈங்கு அதனை விவரிக்க வேண்டிய தவசியமில்லை எனவே சன்மார்க்க போதகர் (ஸல்) அவர்கள் போதனைகளின் அரிய நோக்கங்களெவை யென்பதை கவனிப்போம்.

## இஸ்லாம் மார்க்கம்.

இறைவனின் கட்டளைக்கு முற்றிலும் கட்டுப்பட்டு அவன் அனுப்பிய இறுதியின் பூர்த்தியான வேதமாகிய

திரு குர்ஆன்ஷரீபில் கூறும் விதிகளை நிச்சயமாக ஏற்று ஒப்புக்கொள்ளும் இயற்கைக்கு விரோதமல்லாததுமானதோர் மார்க்கமாகும். இதில் மெய்யான சகோதரத்துவத்தையும் எல்லா மனிதர்களும் ஒரே ஜாதி ஜன சமசிருஷ்டிப்பாகவும், உயர்ந்த ஜாதியென்றும், தாழ்ந்த ஜாதியென்றும், மேன்மக்களென்றும், கீழ்மக்களென்றும், குலம்மென்றும், பெறுமையென்றும், அரசனென்றும். அடிமையென்றும் தனவந்தனென்றும் தரித்திரனென்றும் பாவிக்காமல், ஜாதிபேதமற்ற நீதியை நிலைநாட்டி, அநேக விக்கிரக வணக்கங்களை விட்டு, ஏக தெய்வக் கொள்கையை எல்லா மனிதர்களுக்கும் போதித்து, விஸுவாசிக்கவும், விக்கிரகங்களை வைத்து வணங்கிக் கொண்டு ஒற்றுமையில்லாமலிருந்தவர்கள் எல்லோரும் ஏக ஒற்றுமையுடன் யாவரும் சமத்துவமாய் நின்று, ஒவ்வொரு தினமும் ஐந்துமுறை இறைவனை தொழுக வேண்டுமென்றும், மது வருந்துவதும், வட்டி வாங்குவதும், ஒற்றுமை குலைவுக்கு காரணமா யிருப்பதால், அதனை கண்டித்து கூடாதென்று விலக்கியும், யாதொரு உரிமை யில்லாமலிருந்த பெண்களுக்கு உரிமைகளும், சொத்து பாத்தியதைகளும் கொடுத்து, விதவைகளும்

மருவிவாகம் செய்துகொள்ளலாமென்பதாகவும், ஆண்கள் ஏகமனைவிகளை மணந்து உலக வாழ்க்கையே பெரிதாக எண்ணி மறுமையை மறந்துவிடாமலிருக்க ஒரே சமயத்தில் ஒருவன் நான்கு மனைவிகளுக்கு அதிகமாக மணந்துகொள்ளக் கூடாதென்றும், வருஷத்தில் குறிப்பிட்ட ஒருமாதம் முழுதும் பகலில் உண்ணு விரதமிருக்க வேண்டுமென்றும், ஏழைகளை இம்சைக்குள்ளாக்காமலிருக்க ஐசுரியவான்கள் ஒவ்வொருவனும் தனக்கேற்பட்டச் சகல செலவுகளும் போக, வருஷத்தில் மீதப்படும் தொகைக்கு ரூ. 100க்கு 2½ரூ. வீதம் ஏழைவரி குறிப்பிட்ட மாதத்தில் கொடுக்க வேண்டுமென்றும், இன்னும் திரண்ட திரவிய முள்ளவனுகவும், தேகதிடனும் வழித்துணையுமுள்ளவனுகவு மிருந்தால், உலகவிஷயங்களை உணரும்பொருட்டு மக்கமா நகருக்கு யாத்திரை செல்லவேண்டுமென்றும் போதித்து நிலை நிருத்தினுர்கள். இப்போதனைகளை நாம் நுட்பமாக கவனித்தால் இனி உலகத்திற்கு எக்காலத்திலும் வேண்டற்படாத முறையிலும், திருத்தியமைக்க முடியாத அவ்வளவு பூர்த்தியாகவும்,எல்லாமக்களும் பின்பற்றி நடக்குமாறு அருளப்பெற்ற சன்மார்க்க பொக்கிஷமான திரு

குர் ஆனின் சட்டதிட்டங்களைக்கொண்டே போதித்து வைத்த சன்மார்க்க போதகர் நபிபெருமானார் (ஸல்) அவர்கட்கே சுபசோபனம் உண்டாவதாக.

## இறுதி ஹஜ்ஜும் ஜீவன் பிரிவும்.

சன்மார்க்க போதகரான நபி பெருமானார் (ஸல்) அவர்களின் பால் இட்ட வேலை பூர்த்தியாய்விடவே சன்மார்க்கரவர்கள் மக்காவுக்கு கடைசி யாத்திரை ஹிஜ்ரி 9வது வருஷம் சென்றார்கள். அவர்களின் மெய் விஸ்வாசிகளான தோழர்களில் சுமார் 1,40,000 ஜனங் களும் ஒருங்கே திரண்டு பின்தொடர்ந்து யாத்திரை யானார்கள். சன்மார்க்க போதகர் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவுக்கு அடுத்த அரபாமைதானத் தில், என்னை படைத்து போஷித்து பரிபாலிக்கிற ஆண் டவரே! உமது செய்தியை நான் ஜனங்களுக்கு அறி வித்து, நீர் எனக்கு இட்ட வேலையை செய்து முடித் தேனே? என்று சொல்லவே, அங்குதிரண்டிருந்த ஜனங் களனைவரும் நிச்சயமாக நீங்கள் செய்து முடித்தீர்கள் என்று உற்சாகத்துடனும், உறத்த தொனியுடனும் ஒரு மித்து உரைத்தார்கள். பின்பு நபிபெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதாவது:—

முஸ்லிம்காள்! இனி நாம் எப்பொழுதும் இவ்விடத்தில் ஒன்றாகக் கூடப்போவதில்லை. மேலும் எனக்குப்பின் புதிய யாதொரு சன்மார்க்க போதகரும் வேறு புதிய உம்மத்துகளும் உண்டாகப்போவதில்லை. ஆகவே எனக்குப்பின் நீங்கள் சன்மார்க்கத்தை விட்டு விடாமலும், இறைவனின் இறுதியின் பூர்த்தியான வேதத்தையும், என் வசனங்களையும் கிஞ்சிற்றும் நழுவ விடாமலிருக்க கடைசியாக உங்களனைவர்களுக்கும் எச்சரிக்கை செய்கிறேன். ஆண்டவனே! நீர் சாட்சியாயிருப்பீராக.

மேற்கூறப்பட்டுள்ள உபதேசம் முடிந்ததும் கடைசியாக வரவேண்டிய திருகுர் ஆனின் வசனமும் இறங்கியது. வானவர்களும் வந்து இறைவனின் இறுதி மார்க்கமும் பரிபூரணமாகிவிட்டதென்று நன்மாறுய மகுடங்கொண்டு இருலோகநாதர் நபிபெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து அதை நபிகளுக்கெல்லாம் முத்திரையாகிய திருநபி முகம்மது முஸ்தபாரஸூல் (ஸல்) அவர்களுக்கு சூட்டினார்கள். பின்பு ஹிஜ்ரி 11 வது வருஷம் ஸபர்மாதத்தில் நபிபெருமானார் (ஸல்) அவர்களை மரணப்பிடிபிடித்து 14 நாட்கள்வரை நோய்

வாய்ப்பட்டிருக்கு, ஹிஜ்ரி 11 வது வருஷம் ரபீஉல் அவ்வல்மாதம் 12ஃ (கிறிஸ்து 632 ஜூன்மாதம் 8ஃ) திங்கட்கிழமை மத்தியானம் தமது 63வது வயதில் இந்த அநித்திய மண்ணுலகை விடுத்து விண்ணுலகை அடைந்தார்கள். (இன்னலில்லாஹ்வ இன்னா இலைஹிராஜிஊன்)

வாசகர்களே! இருலோகநாதர் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் சிறுவயதில் தாய் தந்தையற்ற அனாதையாகவும், பிறகு ஆடுமேய்ப்பாளராகவும், பின்பு வியாபார வர்த்தகராகவும், பின்னால் குடும்பஸ்தராகவும், அதன்பின் போர்வீரராகவும், அதன்பிறகு தவசியாகவும், திருதூதராகவும், அதற்குபிறகு இராஜாதி இராஜராகவும், இறுதிமார்க்க உபதேசியாகவும், சகல மக்களுக்கும் சற்குருவாகவும் விளங்கி வந்தார்கள். மிகக்கேடடைந்திருந்த அப் தேசத்தின் பஞ்சமா பாதகங்களை செய்துவந்த பாவிகள் எல்லோரும் ஏககுடும்ப சகோதரர்கள் என்று எண்ணும்படி செய்து குடிராஜ்யத்தை ஏற்படுத்தி ஏக தெய்வ வணக்கத்தையும் ஸ்தாபித்து நிலைநாட்டினார்கள். இவ்விதமாக யாதொரு தீர்க்கதரிசியும் தன்வாழ்நாளிலே செய்துமுடித்து நற்சாட்சிபெறவில்லை. மெய் விஸ்வா

சிகளே! நமது பெருமானார் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்களை பின்பற்றி நடப்பதற்கு அவர்களின் ஜீவிய சரித்திரத்தை அறியவேண்டியது மிகவும் அவசியமாகும். "அல்லா ஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின் வஅலா ஆலிமுஹம்மதின் வபாரிக்வஸல்லிம்."


இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

S. S. அஹமத் ஹனீப்,
"ஸலாமத் ஸைகிள் கம்பெனி, காரைக்கால்."

நவீன கதா புத்தகசாலை,
நெ. 251, மங்கமாரி வீதி, இரங்கூன்.

நவீன கதாவாசக புத்தகசாலை,
40-A. கோலியாஸ்டிரீட், பினங்கு.

O. K. முஹிடீன் ஸாஹிப்,
தபால் பெட்டி நெ. 54, கொழும்பு.

## விளம்பரம்.

| | | |
|---|---|---|
| இஸ்லாம் எப்படிச் சிறந்தது | ... | 0—10—0 |
| இஸ்லாம் சித்திரப்படத்துடன் | ... | 1—0—6 |
| ஈமான் (3-ம் பதிப்பு) ... | ... | 0—6—0 |
| ஆரியருக்கொரு வெடிகுண்டு | .. | 0—12—0 |
| அன்பு ... ... | ... | 0—1—0 |
| பலவகை மனிதர் ... | ... | 0—1—0 |
| பொறுமை ... ... | ... | 0—1—0 |
| அவதார மகிமை ... | ... | 0—1—0 |
| தவம் ... ... | ... | 0—2—0 |
| இருவினை ... ... | ... | 0—2—0 |
| இல்லறம் ... ... | ... | 0—2—0 |
| ஆலய வழிபாடு ... | ... | 0—2—0 |
| பொது மதம் ... ... | .. | 0—2—0 |
| ஆறுதாரம் ... ... | ... | 0—2—0 |
| சந்தேகம் ... ... | ... | 0—2—0 |
| கற்பு ... ... | ... | 0—3—0 |
| அஸ்த பூஷணம் ... | ... | 0—4—0 |
| பதினாறு பேறு ... | ... | 0—4—0 |
| நீதி மாலிகை ... ... | ... | 0—4—0 |
| என் தந்தையார் ... | ... | 0—6—0 |
| சன்மார்க்கப் பணிதல் ... | ... | 0—3—0 |

மானேஜர், "ஹமீதியா" புத்தகசாலை,

H. O. திருச்சினாப்பள்ளி.

Printed at the Islamiya Press, Palakarai, Trichy.

# அருமையான நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| அன்பானந்தன் | 1 | 0 | 0 |
| அருளானந்தன் | 0 | 12 | 0 |
| அதிரூப மோகனவல்லி | 0 | 6 | 0 |
| அகடவிகட ஆனந்தவல்லி | 0 | 10 | 0 |
| அன்புவல்லி | 0 | 6 | 0 |
| அன்புள்ள சகோதரி | 0 | 1 | 6 |
| அலங்கோல மீனாக்ஷி | 0 | 1 | 6 |
| அதிசயங்கள் | 0 | 2 | 0 |
| அபாயத்திற்குபாயம் | 0 | 2 | 0 |
| அபூர்வக் கதைகள் | 0 | 8 | 0 |
| அமர விம்பன் | 1 | 0 | 0 |
| அமிர்தவல்லி | 0 | 8 | 0 |
| அம்பாலிகை | 0 | 12 | 0 |
| அபூர்வ மனோவுல்லாசன் | 0 | 12 | 0 |
| அகட விகட சம்ஸாரி | 0 | 6 | 0 |
| அரங்கநாயகி | 1 | 4 | 0 |
| அரண்மனை ரகசியம் | 1 | 0 | 0 |
| அடைக்கலங் காத்தல் | 0 | 2 | 0 |
| அன்புக்கும் அழிவோ | 0 | 5 | 0 |
| அகமே புறம் | 0 | 8 | 0 |
| அகட விகட விலாசம் | 0 | 8 | 0 |

"ஹமீதியா" பப்ளிஷிங் ஹவுஸ்,
**H. O.** போஸ்ட், திருச்சிராப்பள்ளி.

அடுத்த பக்கத்தை அவசியம் பார்க்க.

## ஓர் நற்செய்தி!

# "இந்திய ஒளி"

(மாதப்பதிப்பு.)

பத்திராதிபர் :- K. A. அப்துல் ஹமீத் சாஹிப்.

இப்பத்திரிகையின் கண் தற்காலத்தின் போக்கை அனுசரித்து வகுப்புதுவேஷத்தை விலக்கியும், தேசபற்றை எழுப்பியும், ஆதாரமற்ற ஆடம்பரங்களை தொலைத்து சீர்படுத்துவதின் அவசியத்தையும், சமூகம், கல்வி, கைத்தொழில், வியாபாரம், தேசீயம், ராஜீயம், முதலிய துறைகளின் முன்னேற்றத்தையும், மூடபழக்கவழக்கங்களை ஒழிப்பதன் அவசியத்தையும், சமூக விடுதலையிலும், மக்களது அந்தகாரத்தையும். மடமையும் நீக்கி ஒளியை உண்டாக்குவதில் "இந்தியஒளி" அரும்பெரும் பாடுபட்டுவருகின்றது. அதனை ஆதரிக்கவேண்டியது ஒவ்வொரு அன்பர்களின் கடமையன்றோ! "நன்றே செய்க அதனை இன்றே செய்க" என்றபடி அதனை ஆதரிக்க இன்றே சந்தாதாரராகுங்கள். வருட சந்தா ரூபாய் ஒன்றரை தான்.

மானேஜர்,
"இந்தியஒளி" ஆபீஸ்,
திருச்சிறுப்பள்ளி.

Wrapper Printed at the City Press Palakarai, Trichy.